# ஸ்டாலின் ஜெகதீசன் செய்தி.

சென்னை, ஜூன் 5.

**நண்பர்களே! உறவினரே!!**

இன்றோடு (5-6-38) உண்ணா நோன்பு 36 நாள் ஆகிறது. மயக்கம், களைப்பு, இளைப்பு வயிற்றில் வலி, தூக்கமின்மை முதலிய உபாதைகள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் எனக்கு ஊக்கமும் மனவுறுதியும் குறையவில்லை. ஆயினும் 5 நாட்களுக்கு மேல் இந்த பூத உடலோடு இருப்பேனா என்கிற ஐயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. எனது உயிர்த் தோழர்களும், உறவினரும், ஏனைய சகோதர சகோதரிகளும் என்னைக்காண விருப்பமுள்ளவர்கள், இதற்குள் வந்து கண்டு கொள்ளலாம். நேற்று (4-6-38) இரவே எனக்குக் கடைசி முடிவு என்று நான் நினைத்து விட்டேன். ஆனால் அப்படி ஒன்றும் நேர்ந்து விடாததுபற்றி அதிசயப்படுகிறேன். எனது முடிவு விரைவாகவே வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். அதை நான் வரவேற்கிறேன். எனது தேக நிலையும் அதற்கு ஏற்பவே இருக்கிறது. எனது உற்றார்களும் உயிர் நண்பர்களும் என்னைப்பற்றி கவலைப்பட்டு வருந்தாதிருக்கும் படி மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

வெற்றி நமதே "தமிழ் வாழ்க" "ஹிந்தி வீழ்க"

இப்படிக்குத் தமிழன்,

**K. N. ஸ்டாலின் ஜெகதீஸ்.**

**5—6—38.**